IN THE COURT OF DISTRICT MUNSIF, KATPADI, VELLORE DISTRICT.
OS.No. 140/2013
Deposition of witness for PW1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | பாலாஜி | Caste | : | |
| Father Name | : | தாமோதரன் | Calling | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 28th day of October, 2025.

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

1. என்னுடைய தகப்பனார் தாமோதரன் அவர்கள் ஆதியம்மாள் அவர்களிடம் 1974 ஆம் ஆண்டு வாங்கிய அதே சொத்துக்களையும் மீண்டும் 1993 ஆம் ஆண்டு விற்றார் என்ற விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. என்னுடைய தகப்பனாருக்கு ராஜி மேஸ்திரி கொடுத்த தான பத்திரத்தின் சொத்துக்களின் விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு நன்றாகவே தெரியும்.

2. தாமோதரனின் கூட பிறந்தவர்கள் சாம்பசிவம் மற்றும் விஸ்வநாதனுக்கு எவ்வளவு சொத்துக்கள் பிரித்து கொடுத்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. ராஜி மேஸ்திரி தாமோதரனுக்கு கொடுத்த தான பத்திரத்தை வைத்துதான் நான் ராஜி மேஸ்திரி உயில் மூலம் ஆதியம்மாளுக்கு கொடுத்துள்ள சொத்து செல்லாது என்று நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரிதான்.

3. ராஜி மேஸ்திரி என்னுடைய அப்பாவுக்கும் என்னுடைய பெரியப்பாவான சாம்பசிவனுக்கும் நான்கு தான பத்திரம் எழுதியுள்ளார். அதில் உள்ள சொத்துக்கள் உயிலில் வருவதால்தான் நான் வழக்கை தாக்கல் செய்துள்ளேன். சாம்பசிவம் உயில் செல்லாது என்று எந்த

வழக்கும் தொடுக்கவில்லை என்றால் சரிதான். ஆதியம்மாள் எங்கள்மீதுதான் வழக்கு தாக்கல் செய்துள்ளாரே தவிர சாம்பசிவத்தின் மீது வழக்கை தாக்கல் செய்யவில்லை.

4. சாம்பசிவத்திற்கு சேர்ந்த சொத்தை இவ்வழக்கில் சேர்த்துவிட்டு சாம்பசிவத்தை இவ்வழக்கில் சேர்க்காதது இந்த வழக்கை தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல ஏனென்றால் அவர் தேவையான தரப்பினர் இல்லை. சாம்பசிவத்தின் தான பத்திரம் செய்யப்பட்ட சான்றிட்ட நகலை தாக்கல் செய்துள்ளேனா என்றால் சரிதான்.

5. சாம்பசிவத்தினுடைய சொத்திற்கு பொறுப்பாளர் அவர்தான் என்று சொன்னாலும் ஆனால் அவருக்கே தெரியாமல் அவர் சம்பந்தமின்றி மேற்கண்ட சான்றிட்ட நகலை இவ்வழக்கில் தாக்கல் செய்திருப்பது தவறு என்று சொன்னால் சரியல்ல. அவரிடம் கேட்டுதான் நான் பெற்றேன். உயில் செல்லாது என்று வழக்கு தொடுத்துவிட்டு உயிலில் இருக்கக்கூடிய வழக்கு சொத்தின் விவரத்தை வழக்குரையில் சொத்து விவரங்கள் உள்ள பகுதியில் நான் சேர்க்கவில்லை என்று சொன்னால் சரிதான். உயிலில் உள்ள சொத்துக்கள் ஏற்கனவே என் அப்பாவுக்கும் என் பெரியப்பாவுக்கும் (சாம்பசிவம்) தான பத்திரம் செய்த சொத்துக்கள் என்பதால் நான் சேர்க்கவில்லை.

6. சொத்துக்களை சேர்க்காததால் வழக்கு செல்லத்தக்கதல்ல என்று சொன்னாலும் அல்லது நிராகரிக்கப்பட வேண்டும் என்று சொன்னாலும் சரியல்ல. வழக்கு சொத்து விவரங்கள் இல்லாமல் நான் வழக்கிற்குண்டான நீதிமன்ற கட்டணத்தை தவிர்ப்பதற்காகதான் 25(d) ன் கீழ் வழக்கை

தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)

(Sd/-)..K.Inbarani
DISTRICT MUNSIF
KATPADI